செய்தி வெளியீடு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்வது தொடர்பாக உர நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம்

------

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில், இன்று (10.08.2015) தலைமை செயலகக் கூட்ட அரங்கில், விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்வது தொடர்பாக உர நிறுவனப் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமை உரையாற்றும்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு கூறியதாவது :–

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்கு பார்வையின்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் எவரும் இல்லை என்ற நிலையினை உருவாக்கும் இலக்கினை நோக்கி கூட்டுறவுத் துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டை, இந்திய திரு நாட்டின் முன்னோடி மாநிலமாக திகழ செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இலட்சியத்தினை நிறைவேற்றும் வகையில், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய கிராம மக்கள் குறிப்பாக, மகளிர், சிறு, குறு விவசாயிகள், ஆதி திராவிட பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மக்களின் சமூக பொருளாதார நிலைகளை மேம்படுத்தும் வகையில் கூட்டுறவுத்துறை பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்குத் திட்டமான தமிழகத்தில் இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்துவதில் கூட்டுறவுத் துறை தமது பங்களிப்பை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. விவசாயத்தில் குறைந்த செலவில் இரட்டிப்பு மகசூல், மும்மடங்கு வருவாய் ஈட்டுதல் என்ற குறிக்கோளுடன் குறைந்த செலவில் நவீன தொழில் நுட்பங்களுடன் பயிரிடுதல், அதிக விளைச்சல் பெறுதல், வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல சந்தையினை உருவாக்கி அதிக இலாபத்தினை ஈட்டுதல் ஆகிய பணிகளை கூட்டுறவுத் துறை மேற்கொண்டு வருகிறது. வேளாண் உற்பத்தியினை அதிகரிக்க விவசாய இடுபொருட்களை சமச்சீர் விகிதத்தில் தேவைப்படும் நேரத்தில் வழங்குவது மிக அவசியம் எனவும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களால், வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 41,79,127 விவசாயிகளுக்கு ரூ.18,281.61 கோடி பயிர் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. உரிய காலத்திற்குள் கடன் தொகையினை திருப்பி செலுத்திய விவசாயிகளுக்கு முழு வட்டியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மட்டும் விவசாயிகளுக்கு ரூ.5,500 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க திட்டமிப்பட்டுள்ளது.

கிராமப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி மற்றும் சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதி திட்டங்கள் மூலமாக 3317 கிடங்குகள் 4,11,800 மெ.டன்கள் கொள்ளளவில் ரூ.379.73 கோடி மதிப்பீட்டில் அரசு மான்யத்தில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவடைந்த 3,75,200 மெ.டன்கள் கொள்ளளவு கொண்ட 3145 கிடங்குகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. இந்த கிடங்குகளை 30,459 விவசாயிகள் 2,40,838 மெ.டன்கள் வேளாண் விளை பொருட்களை சேமிப்பதற்காக பயன்படுத்தி உள்ளனர். இந்த சேமிப்பின் மதிப்பான ரூ.665.04 கோடியில் ரூ.341.95 கோடியினை விவசாயிகள் விவசாய விளை பொருள் மீதான அடமானக் கடனாக பெற்றுள்ளனர்.

## உர விநியோகம்

விவசாயிகளுக்கு தேவையான இராசயன உரங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வழங்கப்படும் பயிர் கடனின் ஒரு பகுதியாகவும் ரொக்க விற்பனையாகவும் விநியோகிக்கப்படுகிறது. உரங்கள், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் இல்லாத விவசாயிகள் என அனைவருக்கும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வாயிலாகவும், டெல்டா மாவட்டங்களுக்கு தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் வாயிலாகவும் உர விநியோகப் பணியினை 4,490 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான டி.ஏ.பி. உரத்தினை உரிய காலத்தில் வழங்கும் பொருட்டு அரசு ரூ.150 கோடியினை வட்டியில்லா கடனாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கியுள்ளது. 2011–12 ம் ஆண்டிலிருந்து கடந்த 30.6.2015 வரை 23,73,577 மெ. டன்கள் இராசயன உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 10.30 இலட்சம் மெ.டன். உரம் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலா விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு டெல்டா பகுதிகளில் விவசாயப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவரும் இவ்வேளையில், விவசாயிகளுக்கு தேவையான டி.ஏ.பி. யூரியா, பொட்டாஷ், காம்ளக்ஸ் உட்பட அனைத்து உரங்களும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தங்கு தடைஇன்றி வழங்க அதிகாரிகளுக்கு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்குத் திட்டமான தமிழகத்தில் இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் வேளாண் உற்பத்தியினை அதிகரிக்க விவசாய இடுபொருட்களை சமச்சீர் விகிதத்தில் தேவைப்படும் நேரத்தில் வழங்குவதற்கு உர தயாரிப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பு அவசியம். எனவே தமிழகத்தில் கூட்டுறவுகள் மூலமாக உர விநியோகப் பணியினை மேற்கொள்ளும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை கோருகின்ற உர வகைகளை தாமதமின்றி உரிய நேரத்தில் உர தயாரிப்பு நிறுவனங்கள் விநியோகம் செய்வதும் மிக அவசியம் எனவும், விவசாயிகளுக்கு சரியான எடையில் உர விநியோகத்தை மேற்கொள்ள, இறக்குமதி செய்யப்படுகின்ற உரங்களை 50 கிலோ மூட்டைகளில் எடையிடும்போது ஏற்படுகின்ற குறைகளை தவிர்க்கும் பொருட்டு, எடையிடும் பணியினை மின்னணு இயந்திரங்களின் வாயிலாக மட்டுமே உர தயாரிப்பு நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை துறை செயலாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளீதரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன்., தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைவர் திரு.எல்லப்பட்டி.எம்.முருகன், சென்னை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் திரு.டி.கிருஷ்ணமூர்த்தி, கூடுதல் பதிவாளர் (விற்பனை, திட்டம் மற்றும் வளர்ச்சி) திரு.இரா.கார்த்திகேயன், கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் திரு.பா.பாலமுருகன் மற்றும் உர தயாரிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**